**TAMILAVEL UMAMAHESWARANAR KARANTHAI ARTS COLLEGE**

**KARANTHAI, THANJAVUR**

**DEPARTMENT OF TAMIL**





கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழவேள் உமா மகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரியின் தமிழ் உயராய்வு மையமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பாவேந்தர் பாரதிதாசன் ஆய்விருக்கையும் இணைந்து நடத்தும் **புரட்சிக்கவிஞரின் அறம் பிறழா அரசியல் பன்னாட்டுக் கருத்தரங்கம் 27-02-2025 28-02-2025** ஆகிய இரண்டு நாட்கள் தமிழ்ப் பெருமன்றத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் **முனைவர் ப. ஜெயராஜ்** வரவேற்புரை ஆற்றினார். தமிழ்த் துறை தலைவர் **முனைவர் இரா. இராகினி** அவர்கள் முன்னிலை உரை ஆற்றினார். கல்லூரி **முதல்வர் முனைவர் இரா. இராசாமணி** அவர்கள் தலைமையுரை ஆற்றினார். **கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் செயலர் இரா. சுந்தர் வதனம்** அவர்கள் தொடக்க உரை ஆற்றினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் **முனைவர் நா.எழிலரசன்** கருத்தரங்க நோக்க உரையாற்றினார். சிறப்பு விருந்தினராக தமிழ்நாட்டரசின் பாவேந்தர் விருதாளர் சூலூர் பாவேந்தர்

பேரவை நிறுவனர் **புலவர் செந்தலை ந. கவுதமன்** அவர்கள் கருத்தருங்க ஆய்வுக் கோவையை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். ஆய்வுக் கோவையின் முதல் பிரதியை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் நிறைவேற்றுக்கழக உறுப்பினர் **சு. செந்தமிழ்ச் செல்வன்** அவர்கள் ஆய்வுக் கோவை குறித்து வாழ்த்துரை ஆற்றினார். தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் **முனைவர் சி. கண்மணி** அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இக்கருத்தரங்கில் பல்வேறு கல்லூரிகளில் இருந்து **50 மேற்பட்ட ஆய்வு மாணவர்கள்** மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.








